# *புனித சில்வெஸ்டர் (-335)*

இவர் உரோமையில் பிறந்தார். இவரது உள்ளத்தில் பக்தி உணர்ச்சிகளை தாய் எழுப்பிவிட்டாள். திறமை வாய்ந்த ஒரு குருவின் பொறுப்பில் தன் மகனை விட்டு வைத்தாள். தியோக்கிளேசியான் அரசன் வேதகலாபனையைத் தொடங்கும் முன்னதாக திருச்சபையில் சற்று அமைதி நிலவியது. அப்பொழுது பாப்புவாயிருந்தவர் புனித மார்செலினுஸ். இவரது கையால் சில்வெஸ்டர் குருப்பட்டம் பெற்றார். திருச்சபையின் துன்பம் நிறைந்த நாட்களையும், தியோக்ளேசியான், மாக்சிமியன் இவர்கள் ஆட்சி துறந்ததையும் 32-ஆம் ஆண்டில் கொன்ஸ்தாந்தின் வெற்றி பெற்றதையும் இவர் கண்டார். இரு ஆண்டுகளுக்குப் பின் புனித மெல்கியாதேஸ் என்னும் பாப்பு இறந்ததும் இவர் பாப்புவானார். ஆர்லஸ் நகரில் நடந்த சங்கத்துக்கு நான்கு பிரதிநிதிகளை இவர் அனுப்பினார். சில பிரிவினைச் சபைகள் அதில் தண்டிக்கப்பட்டன. சங்கத்தின் முடிவை இவர் ஏற்று அங்கீகரித்து மக்களுக்கு இதை அறிவித்தார்.

நிசேயார் நகரில் இவரது ஆட்சியின் போது 225-ஆம் ஆண்டில் ஒரு பொதுச்சங்கத்தின் போது இவருக்கு வயதாகி விட்டதினால் போக முடியவில்லை எனவே பிரதிநிதிகளை அனுப்பினார். அவர்கள் அலெக்சாந்திரியா பிதாப்பிதா, அந்தியோக்கியா பிதாப்பிதா இவர்களை விட முதல் இடம் பெற்று சங்கத்தை நடத்தினார்கள். புனித சில்வெஸ்டர் 24 ஆண்டுகள் 11 மாதங்களாக திருச்சபையை நடத்தி 335-ஆம் ஆண்டில் இறந்தார்.

**சிந்தனை:**

இந்த ஆண்டில் கடவுள் நம் ஆன்மாவுக்கும் உடலுக்கும், நம் குடும்பத்திற்கும் செய்துள்ள உதவிகளுக்காக நன்றி தெரிவிப்போம். இந்த ஆண்டில் நாம் செய்துள்ள குற்றங்குறைகளுக்குப் பரிகாரமாகவும், குற்றங்குறைகளோடு செய்த நன்மைகளைச் சுத்திகரிக்கவும், அசட்டைத்தனத்தால் செய்யாமல் விட்டு விட்ட நன்மைகளுக்கு ஈடாகவும் இயேசுவின் திரு இருதயத்தை அதன் சர்வ நேசத்தோடும், சகல பேறு பலன்களோடும் சகல பாடுகளோடும் பிதாவுக்கு ஒப்புக்கொடுப்போம்.

**செபம்:**

ஆண்டவரே, எனக்கும் நான் நேசிக்கிறவர்களுக்கும், என்னைச் சார்ந்தவர்களுக்கும் இந்த ஆண்டில் நீர் செய்த சகல உதவிகளுக்காகவும் உமக்கு நன்றி சொல்கிறேன்.